


10.12. 2024

தலைப்புச் செய்திகள்

- நாட்டு மக்களின் நலவாழ்வை உறுதிசெய்யும் டிஜிட்டல் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட வேண்டுமென குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு வலியுறுத்தி உள்ளார்.
- எதிர்கட்சிகளின் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்றும் அலுவல்கள் பாதிக்கப்பட்டன.
- டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யரின் பிறந்த நாளான பிப்ரவரி 19-ம் தேதி, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார்.
- மின்வாரியத்தில் உள்ள காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.
- வங்ககடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக இன்று வலுவடைந்தது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

மனித உரிமைகள் தினம்

நாட்டு மக்களின் உரிமைகளையும், மாண்பையும் காக்கும் வகையில் டிஜிட்டல் கட்டமைப்பு உறுதி செய்யப்படவேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லி விஞ்ஞான் பவனில் மனித உரிமைகள் தினவிழா நிகழ்ச்சியில் இன்று உரையாற்றியஅவர், மனித உரிமைகளுக்கு எதிராக சைபர் குற்றங்களும், காலநிலை மாற்றமும் புதிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது என்று கவலை தெரிவித்தார்.

மின்னணு சகாப்தம் மாற்றங்களை கொண்டது என்றாலும், பல்வேறு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டினார்.

இளையோருக்கு சமவாய்ப்பு வறுமை ஒழிப்பு, பசிப்பிணி களைதல் போன்ற கொள்கைகளை சிறப்பாக செயலாற்றி இந்தியா உலகநாடுகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என்றார்.

இந்தியாவில் 5 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரிய கலாச்சாரத்தின் மதிப்பீடுகள் முன்னெடுத்துச் செல்லப் படுவதோடு மக்கள் நல்லிணக்கத்துடனும், சமூக ஒருங்கிணைப்புடனும் வாழ்வதாக குறிப்பிட்டார்.

நலிவடைந்த பிரிவினரின் நலத்திற்காக குரல் கொடுக்கும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அயரா முயற்சிகளை பாராட்டிய அவர், அளப்பறிய அர்ப்பணிப்புடன் அனைவருக்கும் மனித உரிமைகள் கிடைப்பதை இந்த ஆணையம் உறுதி செய்வதாக புகழாரம் சூட்டினார்.

நீதியும், மனித மாண்பும், அடித்தளமாக கொண்ட சமூகத்தை கட்டமைக்க ஒட்டுமொத்தமாக அனைவரும் உறுதியேற்பதன் அவசியத்தையும் குடியரசு தலைவர் வலியுறுத்தினார்.

நமது உரிமை ! நமது எதிர்காலம் ! தற்போது ! என்பதை கருப்பொருளாக கொண்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பிரபல வணிக நிறுவனத்திற்கு எதிராக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் நாள்முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், எதிர்கட்சிகளின் அமளி குறித்து தனது அதிருப்தியை அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா எடுத்துரைத்தார்.

அவை நடைமுறைகளுக்கு எதிராக எதிர்கட்சிகளின் நடத்தை உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவைத்தலைவரின் இந்த கூற்றுக்கு காங்கிரஸ் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்ததோடு அவை நடவடிக்கைகளுக்கு ஆளும் கட்சியினர் இடையூறு செய்வதாக குறிப்பிட்டனர்.

இதனைத் தொடர்ந்து எதிர்கட்சிகளுக்கு எதிராக ஆளும் கட்சியினர் குரல் எழுப்பி முழக்கமிட்டனர்.

இதனால் நிலவிய கூச்சல் குழப்பங்களால் மக்களவை முதலில் நண்பகல் வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது காங்கிரஸ் உறுப்பினர்களின் நடத்தை குறித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு ஆட்சேபனை தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த அறக்கட்டளை நிறுவனத்திற்கு இடையேயான தொடர்பு குறித்து தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார்.

இதனிடையே அரசுக்கு எதிராக எதிர் கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதியில் குழுமி கோஷங்களை எழுப்பியதால் நிலவிய கூச்சல் குழப்பங்களால் அவை நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் மாநிலங்களவையும் நாளைகாலை வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

கிரண் ரிஜுஜு

இதனிடையே நாடாளுமன்றம் சுமூகமாக செயல்படவும், ஆக்கப்பூர்வமான விவாதங்களில் எதிர்கட்சிகள் பங்கேற்கவும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், எதிர்கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களே இதனை விரும்புவதாக எடுத்துரைத்தார்.

ஆக்கப்பூர்வமான விவாதங்கள் அவையில் நடப்பதையே மத்திய அரசு விரும்புவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

ஹேக்கத்தான்

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2024-ன் இறுதி நிகழ்வை ஒட்டி இளம் சாதனையாளர்களுடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை காணொலி வாயிலாக உரையாற்றுகிறார்.

இந்த இறுதிகட்ட நிகழ்வில் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட மாணவர் குழுக்கள் பங்கேற்கின்றன.

7-வது ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் நிகழ்வுகள், நாட்டின் 51 இடங்களில் நாளை நடைபெறும் நிலையில், மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் காணொலி வாயிலாக, இதில் கலந்து கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

ச.பே. முதலமைச்சர்

தமிழ்த்தாத்தா டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யரின் பிறந்த நாளான பிப்ரவரி 19-ம் தேதி, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதுதொடர்பான விவாதத்தில் குறுக்கிட்டு பேசிய முதலமைச்சர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்

❖❖❖❖❖❖❖

ச.பே. துரைமுருகன்

முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பு பிரச்சனை குறித்து கேரள மாநில முதலமைச்சரை நேரில் சந்தித்து பேசி உரியதீர்வு எட்டப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்திற்கு பின்னர் பிரச்சனையை எழுப்பிய பேசிய எதிர்க்கட்சி தலைவர் திரு,எடப்பாடி. கே. பழனிசாமி, அணையின் பராமரிப்புக்காக அங்கு சென்ற தமிழக பொதுப்பணி அதிகாரிகள் தடுத்து நிறுத்தப்பட்டதை சுட்டிக்காட்டி இவ்விசயத்தில் இருமாநில முதலமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வை எட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் திரு.துரைமுருகன், கேரளமாநில அதிகாரிகள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், அணை பாதுகாப்பு பணிகளை தமிழகம் மேற்கொள்வதை தடுக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

முதலமைச்சருடன், தாமும் கேரள மாநிலம் நாளை செல்ல இருப்பதாகவும் அப்போது இதுகுறித்து பேசி முடிவெடுக்கப்படும் என்றும் திரு. துரைமுருகன் தெரிவித்தார்.

மதுரை தெற்கு தொகுதியில் உள்ள கிருதுமால் நதி ஏழரை கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் கூடுதலாக ஆயிரம் தடுப்பணைகள் கட்ட அரசு முடிவு செய்திருப்பதாகவும், நிதி நிலைக்கு ஏற்ப படிப்படியாக கட்டி இப்பணிகள் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான சில தகவல்கள்

திருவையாறு தொகுதி பூதலூர், தஞ்சாவூர், ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 54 ஊராட்சிகள் பயன்பெறும் வகையிலான கொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 65 புதிய திட்டங்கள் மூலம், 4 கோடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும், புதிய திட்டங்கள் மூலம், இரண்டரை கோடி மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆயிரத்து 900 கோடி ரூபாய் செலவில், கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

சக்கரபாணி

தமிழ்நாட்டில் நவீன நெல் கொள்முதல் சேமிப்பு நிலையங்களை கூடுதலாக கட்டுவதற்கு, நடவடிக்கைகள் எடுத்து வருவதாக, மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

மின்வாரியத்தில் உள்ள காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் தேவைப்படும் இடங்களில் துணை மின் நிலையங்கள் மற்றும் புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் 25 ஆரம்ப சுகாரதாரம் மற்றும் 25 நகர்ப்புற சுகாதார நிலையங்கள் விரைவில் திறக்கப்பட இருப்பதாகவும் மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

மாநிலத்திலுள்ள 25 மாவட்ட மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக ஆயிரத்து 68 கோடி ரூபாய் செலவில், மேம்படுத்தப் பட்டிருப்பதாகவும் தற்போது கூடுதலாக 19 மாவட்ட மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு வயதான பக்தர்கள் சென்றுவர, மலேசிய நாட்டின் நிறுவனத்துடன் இணைந்து 120 கோடி ரூபாய் மதிப்பில் செங்குத்தாக செல்லும் பேருந்து வசதி ஏற்படுத்தப்படும் என்று, மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

புவனகிரி தொகுதி வளையமாதேவி அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும், அடுத்த ஆண்டு ஜூன் மாதம் குடமுழுக்கு நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தற்போது 12 ஆயிரத்து 57 பழமையான திருக்கோவில்களில் ஒருகால பூஜை நடைபெற்று வருவதாகவும், இதில் மேலும் 6 ஆயிரம் கண்டறியப்பட்டு, ஒரு கால பூஜை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சேலம் கெங்கவல்லி தொகுதியில் கால்நடை ஆராய்ச்சி பூங்கா விரைவில் திறக்கப்படும் என்று மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

அண்ணாமலை

தமிழ்நாட்டில் 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் பி.ஜே.பி. கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று கட்சியின் மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்

நாகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அண்மை கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து மாநில அரசு முறையான கணக்கெடுப்பு மேற்கொள்ளவில்லை என்று குறைகூறியுள்ளார்

அதிக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய அரசு முன்வரவேண்டும் என்று கோரியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

மனித உரிமைகள் தினம்

மனித உரிமைகள் தினத்தை ஒட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் தமிழ்நாட்டில் மக்கள் அனைவருக்கும் பாகுபாடின்றி அனைத்து உரிமைகளும் கிடைக்கும் வகையில் மாநில அரசின் திட்டங்கள் செயல்படுத்தப் படுவதாக கூறியுள்ளார்.

அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட இந்நாளில் அனைவரும் உறுதியேற்க வேண்டுமென்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நாட்டுநலப்பணி திட்டம் சார்பில் நடைபெற்ற மனித உரிமைகள் தின விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.ஜெகந்நாதன் துவக்கி வைத்தார்.

திருச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரதீப்குமார் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் உறுதிமொழி ஏற்றனர்.

.. வாய்ஸ் ..

திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தர்ப்பகராஜ் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

சதுரகிரி – வாய்ஸ்:

விருதுநகர் மாவட்டம் சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோவிலுக்கு வரும் 13ம் தேதி முதல் 4 நாட்கள் பக்தர்கள் செல்ல வனத்துறை அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

தென்காசி – வாய்ஸ்:

தென்காசியிலிருந்து கேரள மாநிலம் பகவதிபுரம் ரயில் நிலையம் வரையிலான வழித்தடத்தில், 100 கிலோமீட்டர் வேகத்தில், சோதனை ஓட்டம் இன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖

ரயில்

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் திருக்கார்த்திகை தேர் திருவிழா இன்று நடைபெறுகிறது.

இதனிடையே, தீபத்திருவிழாவை ஒட்டி திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளதாக திருச்சி ரயில்வே கோட்டம் தெரிவித்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வரும் 13-ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

வானிலை

தென்கிழக்கு வங்ககடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, தென்மேற்கு வங்ககடல் பகுதியில் இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்ததாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கை தமிழக கடலோர பகுதிகளுக்கு செல்ல கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது

இதன் காரணமாக கடலூர், மயிலாடுதுறை, நாகை, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

மஸ்கட்டில் ஆசியகோப்பை மகளிர் ஜுனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா - சீனாவை நாளை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.